08.11.2023

**OS. 133/ 2023 வா.சா. 1. மெய்யப்பன் த/பெ. வெள்ளைச்சாமி**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

புல எண் 11/17 ற்குதான் நான் பரிகாரம் கேட்கின்றேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் 1994 ல் வாங்கிய சொத்து. யாரிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் மாரியாயி, படிக்காசு அம்மா பிள்ளை இருவரிடமிருந்து வாங்கினேன். புல எண் 11/17 தற்போது யார் அனுபவத்தில் உள்ளது என்றால் அய்யாவு அனுபவத்தில் உள்ளது. பங்காளி என்ற முறையில் ஆடு, மாடு வைத்துக்கொள்ள கொட்டகை போட்டுக்கொள்ள கேட்டார்கள், நான் காலி செய்ய சொல்லும்போது காலி செய்ய வேண்டும் என்று சொல்லி கொடுத்தேன். அதற்காக ஆவணங்கள் எதுவும் எழுதிக் கொண்டோமா என்றால் இல்லை. இச்சொத்தினை அவர்களிடம் கொடுக்கும்போது சொத்தில் என்ன இருந்தது என்றால் காலியாக இருந்தது. தற்போது அந்த இடத்தில் என்ன உள்ளது என்றால் ஆஸ்பெட்டாஸ் சீட் போட்ட மாட்டு கொட்டகை உள்ளது. இந்த செட்டினை யார் போட்டனர் என்றால் அவர்கள் தான் போட்டுக்கொண்டார்கள். வழக்கு சொத்தினை நான் தற்போதும் சென்று பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், பக்கத்து வீடு தான். அந்த சொத்தில் ஆழ்துளை போர்வெல் உள்ளதா என்றால் உள்ளது, அவர்கள் போட்டுள்ளார்கள். அதற்கு மின் இணைப்பு பெற்றுள்ளார்களா என்றால் இல்லை. வருவாய் ஆவணங்களில் புல எண் 11/17 யார் பெயரில் உள்ளது என்றால் அய்யாவு பெயரில் பட்டா வாங்கியிருப்பதாக சொல்கிறார்கள். என் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் புல எண் 11/12 ஐ உட்பிரிவு செய்து புல எண்ணாக 11/ 17 ஆக திருமயம் வட்டாட்சியர் உட்பிரிவு செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணத்தினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி அய்யாவுவின் அப்பா பெயர் காசி. காசியின் அப்பா பெயர் தெரியுமா என்றால் முத்தன். நான் சொத்து வாங்கியுள்ள காசி என்ற படிக்காசு வின் அப்பா பெயர் தெரியுமா என்றால் அருணாச்சலம். அய்யாவுவின் அப்பா பெயர் காசி, நான் கிரயம் வாங்கியவரின் பெயரும் காசி, அதனால் காசி என்ற பெயர் ஒற்றுமையை வைத்து பிரதிவாதி அய்யாவுவின் சொத்தினை நான் அபகரிக்க முயல்கிறேன் என்றால் சரியல்ல. புல எண் 11/12 யாருடைய சொத்து என்றால் அதுதான் நான் கிரயம் வாங்கிய சொத்து. அதற்கான வருவாய் ஆவணங்கள் வைத்துள்ளேனா என்றால் இல்லை, அதற்குதான் பிரச்சனை செய்கிறார்கள். புல எண் 11/12 ற்கும் பிரதிவாதி அய்யாவு பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் இல்லை, என் பெயரில் தான் கிரயம் ஆகியுள்ளது. புல எண் 11/12 னை புல எண் 11/17 ஆக உட்பிரிவு செய்து திருமயம் வட்டாட்சியரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக நான் மேல் முறையீடு

செய்துள்ளேனா என்றால் இல்லை, வழக்கு போட்டுள்ளேன். அருணாச்சலம் மகன் காசி என்று எவரும் இல்லை, நான் அவரிடமிருந்து கிரயம் வாங்கியதாக சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**